சார்பு நீதிமன்றம், பண்ருட்டி. நாள்: 06.07.2024

HMOP. No.15/2020

ம.சா.2 - அருண்குமார்

2024 ம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு. G.சிவகுமார்,பி.எஸ்.சி.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. எனக்கு ரேஷன் கார்டு, ஆதார் கார்டு ஆகியவை பூங்குணம் விலாசத்தில் தான் உள்ளது. நானும் மனுதாரரும் ஒரே தெருவில் தான் வசிக்கிறோம். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை மனுதாரர் வழக்கறிஞரிடம் நான் தான் சொன்னேன். நான் புதுச்சேரியை சேர்ந்த திரு.ராஜபிரகாஷ் என்ற வழக்கறிஞரிடம் தான் மேற்படி விபரங்களை சொன்னேன். நான் எனது முதல் விசாரணை பற்றி 3 முதல் 7 பத்திகளில் சொல்லியுள்ள விபரங்களை மனுதாரர் தனது சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. நான் மற்றொரு அருண்குமாருடம் சேர்ந்து கொண்டு எதிர்மனுதாரரிடம் 07.02.2020 தேதியில் அவரை நிர்பந்தபடுத்தி வெற்று தாளிள் அவரிடம் கையெழுத்து பெற்றோம் என்றால் சரியல்ல. அவராகவே தான் கையெழுத்து போட்டு கொடுத்தார். அவராகவே எழுதி கையெழுத்து போட்டு கொடுத்ததாக வசந்தகுமார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மிகைப்படுத்தி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. நான் எனது சாட்சிய விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றும், அவை உண்மையாக இருந்திருக்குமாயின் அவற்றை மனுதாரரும் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டு இருப்பார் என்றும் சொன்னால் சரியல்ல. தொலைபேசி மூலம் மனுதாரர் என்னை தொடர்பு கொண்டாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னை சாட்சியம் அளிக்க மனுதாரர் தான் என்னை அழைத்தார்.

4. நேற்றும் இன்றும் வழக்கு வாய்தா உள்ளது என்றும் சாட்சியம் அளிக்க வேண்டும் என்றும் வசந்தகுமார் சொன்னார். எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் மிகைப்படுத்தி சொல்லப்பட்ட பொய் என்றும், அதுபோல் ராஜலட்சுமி அதில் கண்டுள்ளவாறு ஏதும் செய்யவில்லை என்றும் சென்னால் சரியல்ல. வழக்கில் வசந்தகுமாருக்கு பின்னடைவு ஏற்பட்டுவிடும் என்பதால் அவர் சொல்லாத பொய்யான சங்கதிகளை என் மூலம் சொல்ல வைப்பதற்காக நடக்காத விபரங்களை கட்டுக்கதையாக நான் எனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

5. உபய மனுதாரர்களுக்கு இடையில் உள்ள பிரச்சனைகள் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும், நான் வசந்தகுமாருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.